2017 ஜூலை 3]

ஆகிய டெல்டா மாவட்டங்கள் முழுவதிலும் e-procurement *முறையில்தான் நெல் கொள்முதல் செய்யப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

116—

தரம் உயர்த்துதல்

***6749—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, அய்யலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், "அய்யலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?" என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார். அய்யலூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் வடமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியாக இருக்கின்றது. ஏற்கெனவே, வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் தரமுயர்த்தப்பட்ட 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற காரணத்தால், அய்யலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர்* V.P.B. *பரமசிவம் அவர்கள்.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மனதில் மதி முகமாக, மக்கள் திலகத்தின் மறு முகமாக, எதிரிகளை வீழ்த்துவதிலே சிங்க முகமாக, நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்கள் தங்க முகம் கொண்ட தங்கத் தாரகையை வணங்கி,* (மேசையைத் தட்டும் ஒலி) *அவர் வழியிலே தமிழ்நாட்டில் நல்லாட்சி புரிகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, அய்யலூர் ஆரம்பர சுகாதார நிலையம் நன்கு பரிட்சயமானது. அவர் 2, 3 மாவட்டங்களில் தன்னுடைய ஆய்வுப் பயணத்தை முடித்துக்கொண்டு, எங்களுடைய தொகுதியிலுள்ள அய்யலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத்தான் வந்து பார்வையிட்டார். அங்கு 30-க்கும் அதிகமான பிரசவங்கள் நடைபெற்று, அந்த ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். வட்டாரத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்பது நமது அரசின் கொள்கை என்பதை நான் நன்கு அறிவேன். இருப்பினும், அய்யலூர் பேரூராட்சியிலுள்ள 3 வார்டுகள் மற்றும் வடமதுரை ஒன்றியம், புத்தூர் ஊராட்சியிலுள்ள 5,000-க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் மலைப் பகுதிகளிலிருந்து அந்த சுகாதார நிலையத்திற்கு வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அவர்கள் வடமதுரை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டுமெனில், 3 பேருந்துகள் மாறி, செல்ல வேண்டியுள்ளது. மேலும், அய்யலூருக்கு அருகிலுள்ள வையம்பட்டியைச் சேர்ந்த 2, 3 ஊராட்சிகளும் இந்த அய்யலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பயன்படுத்துகின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்து, அய்யலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2017 ஜூலை 3]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 386 ஊராட்சி ஒன்றியங்களில் 386 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அய்யலூர் ஆரம்ப சுகாதார நிலையம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகும். அதனால்தான், அங்கு 3 மருத்துவர்கள் பணிபுரிகின்றார்கள். மற்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2 மருத்துவர்கள்தான் பணிபுரிகிறார்கள். சட்டமன்ற உறுப்பினரும் மருத்துவர். ஆகையால், அந்த ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று சொன்னார், அது உண்மை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் இந்தத் திட்டத்தையே முதன்முறையாகக் கொண்டு வந்தது. வருங்காலங்களில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அய்யலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை முன்னுரிமை அடிப்படையில், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர்* V.P.B. *பரமசிவம் அவர்கள்.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி, இரண்டு முக்கியமான நான்கு வழிச்சாலைகளைக் கொண்டிருக்கிறது. அவை பெங்களூரு மற்றும் சென்னை செல்கின்ற நான்கு வழிச்சாலை. கடந்த 2 வருட காலமாக சென்னை-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையிலே அதிகமான சாலை விபத்துகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, வடமதுரையிலிருந்து மணப்பாறை வரையிலே இடையில் எந்தவொரு மருத்துவமனையும் இல்லாத சூழ்நிலையிலே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து ஒரு விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையத்தினை அந்தப் பகுதியிலே நிறுவிக்கொடுத்தால், அனைத்து மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் அவசர காலங்களிலே பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து, அமர்கின்றேன்.*

[2017 ஜூலை 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருக்கின்றார். அது அரசினுடைய சாதகமான பரிசீலனையிலே இருந்துகொண்டிருக்கிறது. விரைவிலே நல்ல அறிவிப்புகள் வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியத்திலுள்ள மருங்கூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன். காரணம், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தினந்தோறும் 450 முதல் 500 புற நோயாளிகள் வந்து செல்கின்றனர். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மற்ற ஆரம்ப சுகாதார நிலையங்களான பேர்பெரியான்குப்பம், காடாம்புலியூர், புலியூர் போன்ற பகுதிகளிலிருந்து வருகின்ற புறநோயாளிகளும், உள்நோயாளிகளாக சேர வேண்டிய சூழ்நிலை வருகின்ற நேரத்தில், அவர்களுக்கு படுக்கை வசதிகள் இல்லாமல் சிரமப்படுகின்றனர். எனவே, மேற்கண்ட மேம்படுத்தப்பட்ட மருங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஊராட்சி ஒன்றியத்திலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டுமென்பது அம்மா அவர்களுடைய அரசின் இலக்கு. அந்த வகையிலே, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக இன்னும்

17 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தினால், அந்த இலக்கு முழுமையாக எய்தப்படும். அதற்குப் பின்னாலே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற, மருங்கூர் போன்ற மிகச் சிறப்பாகச் செயல்படுகின்ற அதிக நோயாளிகள், அதிக பிரசவங்கள் நடைபெறுகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான வசதிகளைச் செய்வதற்கு அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மருங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவது குறித்து கருத்தில் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.

திருமதி ப. சத்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும், கருவில் இருக்கும் சிசுவுக்கும் உணவு தந்ததைப்போல, அடித்தட்டு மக்களும் அன்றாடம் பசியாற அம்மா உணவகம் தந்த அன்னபூரணி எங்கள் அம்மா அவர்களின் ஆட்சியில், பண்ருட்டி தொகுதியில், பண்ருட்டி நகரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு 30 படுக்கைகளுடன் புதிய கட்டடம் கட்டித் தந்து, தாய் சேய் நலப் பிரிவையும் நிறுவிட அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு உரிய வசதிகளைக் கேட்டிருக்கின்றார். உரிய ஆய்வு செய்து, துறை ரீதியாக, முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

திரு. எஸ். பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதிக்குட்பட்ட சங்கரன்பந்தல் துணை

ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

கடந்த 2011-2016 ஆம் ஆண்டுகளில் இதே அவையிலே நான் கேட்டபோது, முன்னுரிமை அடிப்படையிலே அந்தப் பகுதிக்கு 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக்கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்த நிதியாண்டிலாவது அதனை அமைத்துக்கொடுக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த அவையில் குறிப்பிட்டேன். இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக, ஓர் ஒன்றியத்திற்கு ஒரு மருத்துவமனை, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும் என்ற இலக்கு பூர்த்தி செய்யப்படும். 386 ஒன்றியங்களிலே அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவற்றிலே 235 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மட்டும் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டிற்குள்ளாக இலக்கு பூர்த்தி செய்யப்பட்டு, அதற்குப் பின்னாலே, படிப்படியாக நோயாளிகளுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலும், நடைபெறக்கூடிய பிரசவங்கள், உள் நோயாளிகளுடைய எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும் வரும் காலத்திலே முன்னுரிமை கொடுத்து தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. ப. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைக் செட் போட்டு கார்த்திக் சவுண்ட் சர்வீஸ் நடத்தி

வந்த சாதாரணமானவனான என்னை நகர்மன்ற உறுப்பினராக்கி, தலைவராக்கி, வேலூர் மாநகராட்சியில் மாநகராட்சி மேயராக்கி, கழகத்திலே செயற்குழு உறுப்பினராக்கி, இன்றைக்கு மாநகராட்சி செயலாளராக்கி, வேலூர் சட்டமன்ற உறுப்பினராக்கிய என்னுடைய தமிழினத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தி.மு.க. செயல் தலைவர் அண்ணன் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் இருக்கிற Pentland Hospital 5½ ஏக்கரில் உருவாகியிருக்கிறது. வேலூர் தொகுதியிலே சத்துவாச்சாரி மற்றும் பெருமுகை ஆகிய பகுதிகளிலுள்ள நோயாளிகளை அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு கூட்டிக்கொண்டு செல்கிறபோது வழியிலேயே இறந்துவிடுகிறார்கள். அதேபோல காட்பாடியிலிருக்கிற மக்களை பாம்பு கடித்துவிட்டால் அடுக்கம்பாறை மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயே இறந்துவிடுகிறார்கள். இன்றைக்கு Pentland Hospital-ல் 13 மருத்துவர்கள்தான் இருக்கிறார்கள். இரவிலே ஒரேயொரு மருத்துவர்தான் இருக்கிறார். CMC-யும் இருக்கிறது. இருந்தாலும் இதை ஒரு முழுமையான மருத்துவமனையாக தரம் உயர்த்தித்தர வேண்டும். இன்றைக்கு வேலூர் மத்தியிலே 13 தொகுதிகளுக்கு Pentland Hospital இருக்கிறது. இந்த Pentland Hospital-ஐ முழுமையான மருத்துவமனையாக தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிடுகின்ற இந்தக் கோரிக்கையை ஏற்கெனவே, சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பார்த்திபன் அவர்களும், மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் வைத்திருக்கிறார்கள். இந்த அவையிலே உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. துறை ரீதியாக இதுகுறித்து வேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவிலே நீங்கள் எதிர்பார்க்கின்ற வசதிகள் அங்கு கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே திங்கள்நகர் பகுதியிலே ஒரு சித்தா மருந்தகம் இருக்கிறது. அது நீண்டநாட்களாக செயல்படாமல் இருக்கிறது. அன்புக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் வேண்டுவது சித்தா மருத்துவமனையைச் செயல்படுத்துங்கள். இல்லையென்றால், ஆரம்ப சுகாதார நிலையமாகக் கொண்டுவாருங்கள். எப்படியாவது மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்படுத்துவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்திலேயும் மருத்துவமனை மூடிக் கிடக்கின்ற நிலை நிச்சயமாகக் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த சித்தா மருத்துவமனை உடனடியாகச் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும். இந்திய அளவிலே, தமிழ்நாட்டிலே மட்டும்தான் ஆயுஷ் என்று அழைக்கப்படுகின்ற 1,567 சித்தா மருத்துவமனைகள் செயல்படுகின்றன. எந்த மாநிலத்திலும் இவ்வளவு சித்தா மருத்துவமனைகள் கிடையாது. ஆகையினாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மருத்துவமனை கருத்தில்கொள்ளப்படும். நாளைய மானியக் கோரிக்கையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீங்களெல்லாம் பாராட்டக்கூடிய அளவிலே, அறிவிப்புகள் எல்லாம் வெளியிடுவதற்காக காத்திருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதியில் தாலுகா மருத்துவமனை துறையூரில் இயங்கி வருகிறது. இது தலைவர் கலைஞர் அவர்களால் 22-10-1970 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட மருத்துவமனை. இந்த மருத்துவமனை பழமைவாய்ந்த கட்டடத்தில், 16 ஏக்கர்

2017 ஜூலை 3]

நிலத்தில் இயங்கி வருகிறது. இங்கு M.S., M.D., D.G.O. *பட்டம் பெற்ற மருத்துவர் பணியிடங்களுக்கு பற்றாக்குறை உள்ளது. ஒரேயொரு* D.G.O. *மருத்துவர்தான் உள்ளார். அவர் மற்ற மருத்துவமனைக்குச் செல்வதால் மகப்பேறு காலத்தில் பெண்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இங்கு வரக்கூடிய மக்கள் துறையூரிலிருந்து திருச்சிக்கு 50 கி.மீ. சென்று மருத்துவ வசதி பெற பரிந்துரைக்கப்படுகிறார்கள். துறையூர் தொகுதியில் உள்ள மருத்துவமனைகளில் 16 ஏக்கர் நிலம் உள்ளது. எனவே, இதில் நல்ல புதிய கட்டடத்தைக் கட்டி, மருத்துவமனையாக தரம் உயர்த்தி,* M.S., M.D., D.G.O. *படித்த மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தின் மூலமாக மருத்துவர்கள் தொடர்ந்து நியமிக்கப்பட்டு வருகிறார்கள். நான்கு நாட்களுக்கு முன்னதாகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக* Multi Super Speciality Hospital *-க்கு வந்து, நீங்கள் குறிப்பிடுகின்ற* M.S., M.D. *படித்த மருத்துவர்கள் 505 பேருக்கு தன்னுடைய பொற்கரங்களால் பணி ஆணைகளை எல்லாம் நேரடியாக வழங்கி, அவர்கள் பணியிலே சேர்ந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாது, அதைத்தொடர்ந்து இன்னும் விரைவிலே 1,224* M.B.B.S. *மருத்துவர்களும் நீங்கள் சொல்லக்கூடிய 700* P.G., M.S., M.D. *படித்த மருத்துவர்களும் விரைவிலே நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். முருகையா பாண்டியன் அவர்கள்*

திரு. ஆர். முருகையா பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சென்ற நிதிநிலை அறிக்கையிலே அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் மேலச்செவல் என்ற பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தேன். நிதிநிலை அறிக்கையிலேயும் பேசினேன்.*

இந்த ஆண்டு, நாளைய தினம் நடக்கவிருக்கின்ற மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கைக்கான அறிவிப்பிலே மேலச்செவல் பேரூராட்சி பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தருவதற்கான அறிவிப்பையும் வெளியிடுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 30 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதற்கான நிதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். எந்தெந்தப் பகுதிகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும்பொழுது, தங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

***776—டாக்டர் இரா. மாசிலாமணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைலம் தொகுதி, கூட்டேரிப்பட்டியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,